திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : இந்தத் திட்டத்தை ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளாகவே பொது மக்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பம்புசெட்டுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கிணறுகளை வெட்டுவதற்கு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை விரைவிலே அமுல் நடத்தினால் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையாக இருக்கும். அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சாத்தனூர் அணைக் கட்டிற்கு மேற்புறத்தில் வலது பக்கம் கால்வாய் வெட்டுவதற்கு ரூ. 202 லட்சம் அளவில் ஒரு திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு சமீபத்தில் அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டம் சீக்கிரம் நிறைவேற்றப்படும்.

துரிஞ்சலாற்றின் குறுக்கே அணை

*462 வினா **திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், வெறையூர் கிராமத்தின் அருகில் உள்ள துரிஞ்சலாற்றில் அணைகட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) விரையூர் கிராமத்தின் அருகே துரிஞ்சலாற்றின் குறுக்கே ஒரு வெள்ளத் தடுக்கி அமைத்தல் முன்னோடி ஆய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். இராதகிருட்டிணன்: தலைவர் அவர்களே, அந்த ஆற்றில் அதிகமாகத் தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிற காரணத்தினால் அங்கே விரைவிலே அதைக் கட்டி முடித்தால், 20 கிராமங்களுக்கு ஏரிகளில் சென்று பாயக்கூடிய வசதி இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்திற்கு ஏறக்குறைய ரூ. 30.60 லட்சம் செலவாகும் என்று திட்டமிடப்

பட்டிருக்கிறது. இது பற்றிய ஆய்வு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு இந்தத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

பல்லடம் வட்டத்திலுள்ள குளங்களை ஆழப்படுத்துதல்

*** 463 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதியான பல்லடம் வட்டத்தில் உள்ள எல்லாப் பாசனக் குளங்களையும் கூடுதல் தண்ணீர் தேங்கும் வகையில் ஆழப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஆழப்படுத்துவதன் மூலம் இன்னும் அதிகப் படியான தண்ணீர் தேக்கப்படும். அதே நேரத்தில் இது ஒரு நல்ல பயனுள்ள திட்டம். பல்வேறு கிராமங்களில் உள்ள குட்டைகளில் மழைத் தண்ணீரை தேக்கி வைப்பதற்கு நல்ல பலன் கிடைக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை மீண்டும் அமுலாக்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இந்தத் திட்டத்தின்படி குளங்கள் போதுமான ஆழத்தில் இருக்கின்றன என்பதாலும், இவைகளினுடைய நீர் கொள் அளவு தற்பொழுது வருகின்ற நீரை விட அதிகமான கொள் அளவு இருக்கிறது என்ற காரணத்தாலும், மேற்கொண்டு ஆழப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

பொன்னேரி வட்டத்தில் கிடைக்கும் கிளிஞ்சல்கள்

*** 464 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி வட்டத்தின் கழிமுகப் பகுதிகளில் கிடைக்கும் நல்ல வகைக் கிளிஞ்சல்களைக் கொண்டு புதிய தொழில்கள் துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?